சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :01.04.2025

வா.சா.1 – மலைச்சாமி s/o வீரணன்

O.S No. 247/2022:

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

சாட்சியிடம் அவருடைய வக்காலத்து காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி குறிப்பிடுகிறார். சாட்சியிடம் வழக்குரை காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி குறிப்பிடுகிறார். சாட்சியிடம் 14.11.2019 தேதியிட்ட ரசீது காட்டப்பட்டு அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்று சாட்சி மறுக்கிறார். நான் கிரையம் சொத்தை வாங்க எண்ணி வில்லங்கம் பார்த்ததாக குறிப்பிட்டேன் என்றும், யாரிடம் இருந்து பிரதிவாதி முருகேசன் கிரையம் பெற்றிருந்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதி முருகேசன் என் மீதும் சுப்புராம் மீதும் ஒத்தக்கடை காவல்நிலையத்தில் தொகையை திரும்ப பெற்றுக்கொண்டு பத்திரத்தை தவறாக பயன்படுத்துவதாக புகார் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை, சுப்புராம் மீது கொடுத்தாரா என்பது தெரியாது, இதுதொடர்பாக காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை. கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்திட்டுள்ள நபரை சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் தயாராக இருக்கிறோம். பி.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதி என்னிடம் 4 லட்சம் ரூபாய் வாங்கி கொண்டு அதில் 3 லட்சம் ரூபாய் திரும்ப கொடுத்துவிட்டதாகவும், மீதமுள்ள பணத்தை 1 லட்சம் ரூபாய் கொடுக்கும் தருவாயில் கிரைய ஒப்பந்தத்தைரத்து செய்து தருவதாகவும் அதில்

தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது பொய்யாகும். நான் ஏற்கனவே பி.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்தை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றும் தற்போது அதை வேண்டுமென்றே பொய் என்று குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல, அன்றைக்கு கையெழுத்தை மட்டும் தான் காட்டி கேட்டீர்கள் உள்ளே உள்ள விபரத்தை சொல்லி கேட்கவில்லை அதனால் ஒப்புக்கொண்டேன் என்று சாட்சி குறிப்பிடுகிறார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிரைய ஒப்பந்த பத்திரம் 18.07.2022 தேதியிட்டது 10வது தாளிற்கு பின்புறமாக எழுதியதையோ, அதை பின்னிட்டு ரத்து செய்ததையோ என்னுடைய வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமான கிரைய ஒப்பந்ததமானது 13.11.2019 அன்று ஏற்படவில்லை என்றும், அது மோசடியான ஆவணம் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.04.01 17:33:11 +0530

**Sub Judge**
**Melur**